

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.06.2025) சென்னை, கிண்டி, திரு.வி.க.நகர் தொழிற்பேட்டையில், சிறு வணிக நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் தொழிலாளர்களை தேடி பணியிடம் சார்ந்த தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள், மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் விரிவாக்கம் செய்யப்படும் முகாமினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி தெற்கு வட்டார துணை ஆணையர் அமித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன். மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று (05.06.2025) சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ. அபிநயா, மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கப் பள்ளி) மான்விழி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் உள்ளனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம்களில்

# 1,897 பயனாளிகளுக்கு ரூ.16.41 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்! மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ், எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ., மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் பங்கேற்பு!

பெரம்பலூர், ஜீன் 6 -

பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாம்களை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தொடங்கி வைத்து, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு, 1,897 பயனாளிகளுக்கு ரூ.16.41 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்து க்குட்பட்ட எளம்பலூர், செஞ்சேரி, எசனை, லாடபுரம் மற்றும் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட டி.களத்தூர் ஆகிய கிராமங்களில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் ஆட்சியர் கிரேஸ் பச்சாவ்,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் அட்மா தலைவர் வீ.ஜெகதீசன் முன்னிலை வகித்தனர்.

இதில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் முகாம்களில் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய அறிவுறுத்தியுள்ளார்கள். அதற்காக எந்தெந்த ஊராட்சிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்ற விபரத்தினையும் தெரிவித்துள்ளார்கள். அந்த வகையில் எளம்பலூர், செஞ்சேரி, எசனை, லாடபுரம், டி.களத்தூர் ஆகிய ஊராட்சிகளில் நடைபெறும் மக்களுடன் முதல்வர் முகாமில் இன்று கலந்து கொண்டு 1,897 பயனாளிகளுக்கு ரூ.16.41 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை இன்று வழங்கியுள்ளோம்.

முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், கடைக்கோடி ஏழை எளியமக்கள், வறுமை நிலையில் விளிம்பு நிலையில் உள்ள மக்கள் என அனைத்து நிலை மக்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்து அவற்றிற்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணேம் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை செயல்படுத்தியுள்ளார். பல்வேறு காரணங்களினால் நீண்ட நாட்களாக பட்டா மாறுதல் செய்ய முடியாமல் இருப்பது, தனி பட்டாவாக மாறாமல் இருப்பது, முதியோர் உதவித் தொகை பெற முடியாமல் இருப்பது, புதிய தொழில் தொடங்க கடனுதவி, மின் இணைப்பு கோருதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களுக்கு மக்கள் நேரில் சென்று அலைந்து சிரமப்படு வதை தவிர்க்கும் வகையில் மாவட்ட நிர்வாகமே மக்களைத் தேடி வந்து குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்திடும் வகையில் மக்களுடன் முதல்வர் முகாம் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அனைத்து முதல் நிலை அலுவலர்களும் முகாம் நடைபெறும் ஊராட்சிகளில் பொதுமக்களை தேடி பொது மக்களின் குறைகளை கேட்டறிந்து, தீர்வு காண்பதற்காக வருகை தந்துள்ளார்கள். பொது மக்கள் தங்களது கோரிக்கைகளுக்காக அரசு அலுவலகங்களுக்கு சென்று அலைந்து திரிந்த காலம் மாறி தற்போது அரசு அலுவலர்களே அனைத்து பகுதி கிராமங்களுக்கும் சென்று பொதுமக்களின் கோரிக்கைகளை தீர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறாதவர்களில் தகுதியுடையோரை கண்டறியும் வகையில் சிறப்பு முகாம்கள் விரைவில் நடத்தப்படும்.

பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் அதிகம் பயன்பெறும் வகையில் வேளாண்மைத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, தாட்கோ, தொழிலாளர் நலத்துறை, சுகாதாரத்துறை, கூட்டுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளில் சார்பில் பொதுமக்களுக்கு பல்வேறு வகையான அரசு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களின் கீழ் பயன்பெற முடியாமல் இருக்கும் பயனாளிகள் தங்களது கோரிக்கையை மனுவாக வழங்கினால் முறையாக விசாரித்து அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நலத்திட்டங்கள் கிடைத்திட வழிவகை செய்யப்படும்.

முதலமைச்சர் அவர்கள், குடும்பத்தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப் பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் அரசு பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உள்ளிட்ட பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்களை மாணவ,மாணவியர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிக்கு உட்பட்ட இடங்களில் நடைபெறும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் கலந்துகொண்டு தங்களது கோரிக்கைகள் தொடர்பாக மனு கொடுத்து இந்த முகாமினை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு இதுபோன்ற முகாம்களை நடத்தி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த முகாம்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எளம்பலூர், இந்திரா நகர் ரோவர் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 463 நபர்களுக்கு ரூ.3,29,90,551 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், செஞ்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 331 நபர்களுக்கு ரூ.3,23,23,779 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், எசனை அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 270 நபர்களுக்கு ரூ.2,65,77,564 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், லாடபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 394 நபர்களுக்கு ரூ.3,49,41,502 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், டி.களத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 439 நபர்களுக்கு ரூ.3,72,50,566 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் என மொத்தம் 1,897 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை ப் பட்டா, மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், தாலிக்கு தங்கம், தையல் இயந்திரம், வெங்காயக் கொட்டகை அமைக்க ஆணைகள், வேளாண் இடுபொருட்கள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் என பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.16,40,83,962 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வுகளில் அரசு உயரதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று தமது இல்லத்தில் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!

# கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் இல்ல மணவிழா!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஜூன் 6 -

திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராம் சாஸ்திரி நகர் நினைவில் வாழும் கே.ஜெகதீஷ் - திருமதி தீபா ராணி ஜெகதீஷ் ஆகியோரின் இளைய புதல்வர் ஜி.ஜே.தரணி ராஜ் தென்காசி மாவட்டம் ஆழ்வார் குறிச்சி பேரூர் பொன்ஸ் (எ) பொன் சுந்தரம் - திருமதி சிவகாமி ஆகியோரின் புதல்வி எஸ். பொன்னரசி ஆகியோரின் திருமண விழா இன்று (6.6.2025 வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்லத்தில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று மண விழாவை நடத்தி வைத்து மண மக்களை வாழ்த்துகிறார்.

இவ்விழாவிற்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மேயர் பிரியா ராஜன், கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ, தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, வெற்றி அழகன், இ.பரந்தாமன், ஜோசப் சாமுவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருமண வரவேற்பு விழா இன்று (6.6.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6:30 மணி அளவில் எழும்பூர் ரித்தர்டன் சாலை பி.கே.என். மஹால் அனிதா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழக செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், கழகத்தின் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் வி.அபாய, தி.தயாளன், ந.பாலு, மு.மனோகரன், சி.சேகர், ஆர்.எம்.ரங்கநாதன், ஆர்.பாபு, வி.விஜயகுமார் டால்பின் அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

சொ.வேலு எம்.சி., வி.சுதாகர், கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன் எம்.சி., கே.எஸ்.எம்.நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., எல்.சுந்தர்ராஜன் எம் சி, பரிதி இளம் சுருதி எம்.சி., பாத்திமா முசாபர் எம் சி., சுமதி புத்தனேசன் எம்.சி. ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### செஞ்சி இராஜாதேசிங்கு அரசு மேல் நிலைப் பள்ளியில் படிக்கும்

# பள்ளி மாணவர்களுக்கு நடப்பு கல்வி ஆண்டுக்கான பாடப் புத்தகங்கள்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, ஜூன் 6 -

செஞ்சி இராஜாதேசிங்கு அரசு மேல் நிலைப் பள்ளியில் படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு நடப்பு கல்வி ஆண்டுக்கான பாட புத்தகங்களை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல். ஏ. வழங்கினார்.

தமிழ்நாட்டில் பள்ளி இறுதி தேர்வு முடிந்து கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் தேதி முதல் கோடை விடுமுறை பள்ளிகளுக்கு விடப்பட்டது தொடர்ந்து ஜூன் 2ஆம் தேதி பள்ளிகள் திறக்கப் படும் எனதமிழ்நாடு அரசு அறிவித்ததை அடுத்து பள்ளிகள் அனைத்தும் திறக்கப்பட்டன.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, மேல்மலையனூர் தாலுகாவில் உள்ள அனைத்து பள்ளிகளும் திறக்க ப்பட்டது.

இதையடுத்து செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும்மாணவர்களுக்கு விலையில்லா புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திண்டிவனம் கல்வி மாவட்ட அலுவலர் சிவசுப்பி உரமணியன் தலைமை தாங்கிஅனைவரையும் வரவேற்றார்.செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் ராமசாமி அனைவரையும் வரவேற்றனார்.

பள்ளி உதவி தலைமை ஆசிரியர் ராமசாமி அனைவருக்கும் நன்றி கூறினார்.

### ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் இயங்கும்

# பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு!

## ஆதிதிராவிடர் நலத்துறை அறிவிப்பு!

சென்னை, ஜூன் 6-

2025 - 2026 ஆம் கல்வி ஆண்டிற்கான இணைய வழி பொது மாறுதல் கலந்தாய்வு ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி / உயர்நிலைப்பள்ளி / நடுநிலைப்பள்ளி / ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள், கணினி பயிற்றுநர், உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர்/ காப்பாளர், இடைநிலை ஆசிரியர்/ காப்பாளர் ஆகிய பணியிடங்களுக்கு மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதலுக்கான இணைய வழி பொது மாறுதல் கலந்தாய்வு 12.06.2025 மற்றும் 13.06.2025 ஆகிய இரண்டு நாட்களில் காலை 10.00 மணி அளவில் அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. பணியிட மாறுதல் கோரி இணைய வழியில் விண்ணப்பித்தவர்கள் மட்டும் இணைய வழி பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



அடையார் மண்டலம் சைதை 169வது வார்டில் உள்ள ரெட்டி குப்பம் கால்வாயில் ரூபாய் 7.47 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் சுற்று சுவர் எழுப்பி கால்வாய் மேல் வேலி அமைத்து மேம்படுத்தும் பணியினை துணை மேயர் மு.மகேஷ் குமார் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மின்னல் கந்தப்பன், உதவி ஆணையர், உதவி பொறியாளர், வட்ட செயலாளர் எல்.ஆரோக்கியராஜ், வட்டப் பொறுப்பாளர் சைதை ஆ. வரதன், மாவட்டப் பிரதிநிதிகள் என்.நந்தகோபால், சைதை ஏ.மஜீத், மற்றும் செல்வகுமார், வே. கோதண்டம், மு. சாந்தி, எம்.பாபு, பா.செல்லபாண்டியன், ஏ.எஸ்.ரியாஸ், அகமது, ஏ.சுப்பிரமணி, கி. சிவபிரகாஷ், ராஜா சம்பத், எம்.மணவாளன் மற்றும் கழகத் தோழர்கள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ வி. ஆர்.அருண் ஏற்பாட்டில் புழல் 24வது வட்டத்தில் (ஜூன் 3, 2025) முத்தமிழறிஞர் கலைஞரின் 102 ஆவது பிறந்த நாள் முன்னிட்டு மாதவரம் சட்ட மன்ற உறுப்பினரும் மாவட்ட கழக செயலாளர் எஸ்.சுதர்சனம் தலைமையில் பகுதி செயலாளர் ஜி. துக்காராம், 24வதுவட்ட செயலாளர் கே.பி.சுந்தரேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் ஆகியோர் முன்னிலையில் 500 பேருக்கு காலை உணவு, 500 பேருக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சீனிவாசன், பகுதி அமைப்பாளர் வினோத், வட்ட கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட சாலையோர

# வியாபாரிகள் வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது!

சென்னை, ஜூன் 6-

பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி, பதிவு செய்யப்பட்ட 35,588 சாலையோர வியாபாரிகள் குறித்த பெயர் பட்டியலை மாநகராட்சியின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனை ஒழுங்குமுறைப்படுத்துதல் 2015 விதிகளின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் சம்மந்தப்பட்ட வட்டார துணை ஆணையர் தலைமையில், ஒவ்வொரு மண்டலத்திற்கும் 14 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நகர விற்பனைக்குழு அமைக்கப்பட உள்ளது. இக்குழுவில் சாலையோர வியாபாரிகளிலிருந்து ஆறு உறுப்பினர்களை தேர்தல் வாயிலாக தேர்வு செய்யப்பட உள்ளனர்.

அதன்படி, 16.06.2025 அன்று முதல் 18.06.2025 வரை அந்தந்த மண்டலங்களில் உள்ள தேர்தல் நடத்தும் அதிகாரிகளால் வேட்புமனு படிவம் இலவசமாக வழங்கப்படும். 18.06.2025 அன்று வேட்பு மனுக்கள் பெறப்பட்டு தொடர்ந்து தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 26.06.2025 அன்று வாக்குப் பதிவும், 27.06.2025 அன்று வாக்கு எண்ணிக்கையும் நடைபெற உள்ளது.

இத்தேர்தலுக்கான சாலையோர வியாபாரிகளின் பெயர் முகவரி அடங்கிய வாக்காளர் பட்டியலை சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும் ஆணையரால் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களால் 04.06.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள வருவாய்த்துறை அலுவலகத்திலும், மாநகராட்சியின் WWW.CHENNAICORPORATION.GOV.IN என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு மூவரசம்பட்டு ஊராட்சி திமுக சார்பில் மூவரசம்பட்டு பேருந்து நிலையம் அருகில் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே. விவேகானந்தன் (எ)ரவி தலைமையில் கழக கொடி ஏற்றி இனிப்பு மற்றும் 500 பேருக்கு காலை சிற்றுண்டி வழங்கினார். இவ்விழாவில் புனித தோமையார் மலை ஒன்றிய துணைத் தலைவர் பா. பிரசாத், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் ஜி.கே. வி.அன்பு பிரபாகரன், மூவரசம்பட்டு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எம்.பி.பிரகாஷ், முன்னாள் மாவட்ட பிரதிநிதி எம்.கே.பழனி ஊராட்சி மன்ற அனைத்து வார்டு உறுப்பினர்கள், கிளைக் கழக செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.